**கூடுதல் மாவட்ட  உரிமையியல் நீதிமன்றம்,திருப்பூர்.**
**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ L.L.M.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,  திருப்பூர்.**

**2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ விசுவாவசு வருடம், தை திங்கள்27ம் நாள்**

**இ.ம.எண்.1/2026**
**இன்**
**அ.வ.எண்.28/2025**

நாசர்அலி ..மனுதாரர்/6ம் பிரதிவாதி

/எதிர்/

சம்சாத் பேகம் ..எதிர்மனுதாரர்/வாதி

1. மும்தாஜ்
2. மெகராஜ் பேகம்
3. ஸ்ரீனிஷா
4. சாதிக்அலி
5. இசாமா ..எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 12.01.2026ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ஆனந்தன் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.தாமரை மணாளன் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>உத்தரவு</u>

கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டி 1908ம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 8 விதி 1A ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u> :**

மனுதாரர் அசல் வழக்கில் 6ம் பிரதிவாதி. அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் சுவாதீன ஒப்படைப்பு பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தாவா சொத்தில் உள்ள அவரது உரிமையை வாய்மொழியாக விட்டுகொடுத்துவிட்டார். தாவா சொத்தின் சுவாதீனத்தில் மனுதாரர் உள்ளார் என்பதை காண்பிக்க வேண்டி மனு ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே, மனு ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1ம் <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று அது சட்டப்படியும் பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. தாவா சொத்தின் சுவாதீனத்தில் 40 வருட காலமாக மனுதாரர் இருந்து வருவதாக கூறுவது தவறானது. தாவா சொத்தை வாதியும் 1 முதல் 5 பிரதிவாதிகளும் வாய்மொழியாக விடுதலை எதுவும் செய்து கொடுக்கவில்லை. தாவா சொத்திற்குரிய சொத்து வரி, குடிநீர்கட்டணம் 1ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ளது. மின்சார கட்டணத்திற்குரிய தொகையை மனுதாரர் அனைவரிடமும் பெற்று அவர் செலுத்தியதால் மனுதாரர் பெயரில் ரசீது பெற்றுள்ளார். மின் இணைப்பு மனுதாரருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டதல்ல. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி

செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இரு தரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்.

**6. தீர்வு :**

**6.1** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், தாவா சொத்தின் சுவாதீனத்தில் மனுதாரர் உள்ளதை நிரூபிக்க வேண்டி மனு ஆவணங்களை தாக்கல் செய்வது அவசியமான ஒன்று என்பதால் மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** 1ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனு சொத்தின் மின் இணைப்பு 1ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ளது என்றும், மனுதாரர் அனைவரிடமும் மின் கட்டணத்திற்கான தொகையை பெற்று அவரே செலுத்தியதால் ரசீது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தின் சுவாதீனத்தில் எதிர்மனுதாரர்களும் உள்ளார்கள் என்றும், எனவே, மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர்/6ம் பிரதிவாதி மற்றும் 2 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் கோரி 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.4** அசல் வழக்கில் மனுதாரர்/6ம் பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் அவரது தரப்பில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இருதரப்பிற்கும் அவர்களது தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை தாக்கல் செய்வதற்கு போதிய வாய்ப்பளிப்பது அசல் வழக்கில் தீர்வு காண்பது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று முடிவுசெய்து, மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்,** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு, மேற்படி தேதியன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI Digitally signed by A SUBASHRI Date: 2026.01.27 17:34:22 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்

<u>**இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :**</u> இல்லை.

A SUBASHRI Digitally signed by A SUBASHRI Date: 2026.01.27 17:34:28 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்